# மறுசீரமைப்பு கட்டமைப்பு



வாருங்கள் மறு பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்

## மறுசீரமைப்பு கட்டமைப்புடன் தொழில் ஒப்பந்தங்களுக்கு மறுபேச்சுவார்த்தை செய்தல்

# தவணைக் கொள்முதல் மற்றும் சாதன வாடகை ஒப்பந்தங்களுக்கு மட்டுமே மாற்றுக் கடனடைப்புத் திட்டம்

15 ஜனவரி முதல் 26 பிப்ரவரி 2021 வரை, வர்த்தகச் சாதனங்களை அல்லது வாகனங்களைத் தவணைக்கு எடுத்தவர்களும் வாடகைதாரர்களும், மறுசீரமைப்பு கட்டமைப்புக்குத் (Re-Align Framework) தகுதிபெற்றால், மாற்றுக் கடனடைப்புத் திட்டத்தில் சேரலாம். அவர்கள் செலுத்தவேண்டிய பாக்கித் தொகைகளை 18 மாதங்களுக்குள் திருப்பித்தர அனுமதிக்கும் தவணைத் திட்டம் இது. மாற்றுக் கடனடைப்புத் திட்டத்தில் சேர்வோர், மறுசீரமைப்பு கட்டமைப்பின் ஒப்பந்த ரத்து நிவாரணத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள். அதேபோல, கட்டமைப்பைப் பயன்படுத்துவோர் மாற்றுக் கடனடைப்புத் திட்டத்தைப் பயன்படுத்த முடியாது.

மாற்றுக் கடனடைப்புத் திட்டத்தில் சேரும் முறையின் சுருக்கமான விளக்கத்தைக் கீழே காணலாம்.

### 15 ஜனவரி முதல் 26 பிப்ரவரி 2021 வரை

**1** தவணைக்கு எடுத்தவர்களும் வாடகைதாரர்களும் ("பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம்"), ஒப்பந்தத்தின் அனைத்து தரப்புகளுக்கும் பங்குள்ள மற்ற தரப்புகளுக்கும் ("மற்ற தரப்பு") 26 பிப்ரவரி 2021 தேதிக்குள் **திருத்த அறிக்கையை** அனுப்பிவைத்து மாற்றுக் கடனடைப்புத் திட்டத்தின்கீழ் உதவி நாடலாம்.

### 4 வாரப் பேச்சுவார்த்தை காலகட்டம்

**2** பாக்கித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான மாற்றுக் கடனடைப்பு ஏற்பாடு மற்றும்/அல்லது ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த, ஒப்பந்தத் தரப்பினர்களுக்கு 4 வாரக் காலகட்டம் அளிக்கப்படும். அவர்கள் கலந்து பேசி, ஒருவர் மற்றவரது நிலையைப் புரிந்துகொண்டு, அனைத்து தரப்புகளுக்கும் ஏற்புடைய இணக்கத்தை அடைய முயற்சி செய்யவேண்டும்

*பேச்சுவார்த்தை நிறைவேறினால்*

**3** ஒப்பந்தத் தரப்பினர்கள் திருத்தியமைத்த ஒப்பந்தத்தை / மாற்றுக் கடனடைப்பு ஏற்பாட்டைச் செயல்படுத்துவார்கள்

*பேச்சுவார்த்தை நிறைவேறாவிட்டால்*

### 2 வார ஆட்சேபக் காலகட்டம்

*பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனத்தின் திருத்த அறிக்கையை மற்ற தரப்பினர் எதிர்க்காவிட்டால்*

**4a** திருத்தியமைத்த மாற்றுக் கடனடைப்பு ஏற்பாடு, திருத்த அறிக்கையின் தேதியிலிருந்து ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இடம்பெறும்

*பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனத்தின் திருத்த அறிக்கையை மற்ற தரப்பினர் எதிர்த்தால் (எ.கா. தொழில் நிறுவனம் மாற்றுக் கடனடைப்புத் திட்டத்திற்குத் தகுதி பெறுவதை)*

**4b** மற்ற தரப்பு **ஆட்சேப அறிக்கையை** தாக்கல் செய்யும். பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் தகுதி பெறுகிறதா என்பதை மதிப்பீட்டாளர் தீர்மானிக்கையில், ஒப்பந்தம் தொடர்ந்து நடப்பிலிருக்கும்



Ministry of Law
SINGAPORE

மேல் விவரம் அறிய, www.go.gov.sg/re-align என்ற இணையப்பக்கத்தை நாடுங்கள்

2020-COVID-INFO4